## பறவைகளின் முக்கியத்துவம்

பறவைகள் சுற்றுசூழல் பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மகரந்த சேர்க்கை , விதை பரப்புதல் , பூச்சிகளை உண்பது போன்ற முக்கிய பணிகளை பறவைகள் செய்து வருகின்றன. உணவு சங்கிலியில் முக்கிய அங்கமாக இருப்பதால் பறவைகள் இல்லையென்றால் உலகின் சூழலியல் முற்றிலும் அழிந்துவிடும்.

## தமிழ்நாட்டின் மாநில பறவை



## மரகத புறா

**Emerald dove (Chalcophaps indica)**

மரகத புறா பெயருக்கேற்றவாறு மரகத வண்ணத்தில் இருக்கும் புறா. 23-27 செ.மீ நீளத்தில் இருக்கும் இந்த பறவையை அடர்ந்த காடுகளில் காணமுடியும். இவை தென்கிழக்கு நாடுகளிலும் உள்ளது. பொதுவாக தரையில் உதிர்ந்து கிடக்கும் பழங்களையும் , விதைகளையும் இவை சாப்பிடும்.

## பறவைகளை பற்றி அறிந்து கொள்வோம் !

இந்தியாவில் எத்தனை பறவை இனங்கள் உள்ளன ?
ஏறத்தாழ 1364 பறவை இனங்கள் இந்தியாவில் உள்ளன.

இந்தியாவில் மட்டுமே காணப்படும் பறவை இனங்கள் எத்தனை ?
81 பறவை இனங்கள் இந்தியாவில் மட்டுமே உள்ளன.
இந்த பறவைகளை உலகில் வேறு எங்கும் காணமுடியாது.

தமிழ்நாட்டில் எத்தனை பறவை இனங்கள் உள்ளன ?
ஏறத்தாழ 530 பறவை இனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டின் மாநில பறவையின் பெயர் என்ன ?
மரகத புறா

பறவைகள் ஏன் வலசை செய்கின்றன ?
பருவநிலை , உணவு காரணங்களுக்காக பறவைகள் குளிர் பிரதேசங்களில் இருந்து சூடான இடங்களுக்கு வலசை செய்கின்றன.

இந்தியாவில் அதிக உயரமாக பறக்கின்ற பறவை எது ?
வரித்தலை வாத்து. வலசை வரும்பொழுது எவரெஸ்ட் மலை சிகரத்தின்(29,000 அடி) மேல் வரித்தலை வாத்து பறந்து வந்ததாக பதிவாகி உள்ளது.

பறவைகளில் வேகமாக பறக்கின்ற பறவை எது ?
பொரி வல்லூறு. ஒரு மணி நேரத்தில் 389 கி.மீ வரை பறக்கும் திறன் உள்ளது இந்த வல்லூறு.

தமிழ்நாட்டில் வலசை பறவைகள் எந்த மாதங்களில் காணப்படுகின்றன ?
அக்டோபர் - பிப்ரவரி மாதங்கள் வரை வலசை பறவைகளை தமிழ்நாட்டில் காணலாம்.



Purple Heron - Ardea purpurea – செந்நீல கொக்கு

# பறவைகள் பலவிதம் !



knf-india.in

Kanniyakumari Nature foundation


Blue-tailed bee-eater
Merops philippinus
நீல வால் பஞ்சுருட்டான்


Gray Francolin
Francolinus pondicerianus
கௌதாரி


Eurasian Collared Dove
Streptopelia decaocto
பட்டை கழுத்து புறா


Purple-rumped Sunbird
Leptocoma zeylonica
ஊதா பிட்ட தேன்சிட்டு


Oriental Honey-buzzard
Pernis ptilorhynchus
தேன் பருந்து


Indian Roller
Coracias benghalensis
பனங்காடை


Barn Owl
Tyto alba
கூகை ஆந்தை


Orange-headed Thrush
Geokichla citrina
செந்தலை பூங்குருவி


Stork-billed Kingfisher
Pelargopsis capensis
பருத்த அலகு மீன்கொத்தி


Clamorous Reed Warbler
Acrocephalus stentoreus
பெரிய நாணல் கதிர்குருவி


White-cheeked Barbet
Psilopogon viridis
வெண் கன்ன குக்குறுவான்


Common Hawk-Cuckoo
Hierococcyx varius
அக்காகுயில்


Spotted Owlet
Athene brama
புள்ளி சிறு ஆந்தை


White-browed Wagtail
Motacilla maderaspatensis
கருப்பு வெள்ளை வாலாட்டி


Gray Junglefowl
Gallus sonneratii
காட்டுக்கோழி


Red-naped Ibis
Pseudibis papillosa
கருப்பு அரிவாள்மூக்கன்


Bronze-winged Jacana
Metopidius indicus
கரும்பச்சை இலைகோழி


Laughing Dove
Streptopelia senegalensis
சிறிய தவிட்டுப்புறா


Asian Brown Flycatcher
Muscicapa dauurica
பழுப்பு ஈப்பிடிப்பான்


Caspian Tern
Hydroprogne caspia
காஸ்பியன் ஆலா


Red-rumped Swallow
Cecropis daurica
சிவந்த பிட்ட தகைவிலான்


Ashy crowned Sparrow-Lark
Eremopterix griseus
சாம்பல் தலை வானம்பாடி


Little Egret
Egretta garzetta
சின்னக் கொக்கு


Indian Spot-billed Duck
Anas poecilorhyncha
புள்ளிமூக்கு வாத்து


Black-winged Stilt
Himantopus himantopus
நெடுங்கால் உள்ளான்


Pallid Harrier
Circus macrourus
வெளிர் நிற பூனைப்பருந்து


Booted Eagle
Hieraaetus pennatus
வெண்தோள் கழுகு


Black-headed Gull
Chroicocephalus ridibundus
கருப்புத்தலை கடற்காக்கை


Red-whiskered Bulbul
Pycnonotus jocosus
சிவப்புமீசை சின்னான்


Jerdon's Bushlark
Mirafra affinis
ஜெர்டான் புதர் வானம்பாடி


Asian Openbill
Anastomus oscitans
நத்தைகுத்தி நாரை


Cattle Egret
Bubulcus ibis
உண்ணிக்கொக்கு


Spot-billed Pelican
Pelecanus philippensis
புள்ளி அலகு கூழைக்கடா


Greater Flameback
Chrysocolaptes guttacristatus
பெரிய பொன்முதுகு மரங்கொத்தி


Yellow-wattled Lapwing
Vanellus malabaricus
மஞ்சள்மூக்கு ஆள்காட்டி


Oriental Darter
Anhinga melanogaster
பாம்புத் தாரா